**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 26–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் இல்லை . பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.808/2021

பி.வா.சா.1 செந்தில்செல்வன் த/பெ வேலுச்சாமி

<u>வாதி தரப்புகுறுக்குவிசாரணை :–</u>

1. என்னுடைய நிறுவனம் தனியார் நிறுவனமா அல்லது கூட்டாண்மை நிறுவனமா என்றால் கூட்டாண்மை நிறுவனமாகும். அந்த கூட்டாண்மை நிறுவனத்தில் யார் யார் பங்குதாரர்கள் என்றால் நான், என் தந்தை மற்றும் என் தாயார் ஆவார். மேற்படி கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. சைசிங் மில்ஸ் என்ற நிறுவனத்தை எத்தனை ஆண்டுகளாம் நடத்தி வந்தீர்கள் என்றால் சுமார் 10 வருடங்களாக மேற்படி தொழில் 2006 முதல் 2019 வரை நடத்தி வந்தேன்.

2. என்னுடைய பெயர் செந்தில்செல்வன் ஆகும் செந்தில்வேல் என்ற பெயர் எனக்கு கிடையாது. மேற்படி சைசிங் மில்ஸ் தேவையான கேமிக்கல்ஸ் எங்கு வாங்குவீர்கள் என்றால் ஈரோடு, சோமனுர் ஆகிய இடங்களில் வாங்கப்படும். வாதி நிறுவனத்திடம் கேமிக்கல்ஸ் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். வாதியிடம் கேமிக்கல்ஸ் வாங்கியதற்க்கு வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான்.

3. மேற்படி அறிவிப்புக்கு நான் எந்த தேதியில் பதில் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் பதில் அறிவிப்பு கொடுத்தேன் தேதி தற்போது ஞாபகம் இல்லை. மேற்படி பதில் அறிவிப்பை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். வாதி நிறுவனத்துடன் 20.12.2018 வரை சரக்கு வாங்கினீர்களாக என்றால் இல்லை.

4. என்னுடைய எதிர்வழக்குரையிலும், பிரமாணவாக்குமூலத்திலும் சரக்கு தரம் குறைந்து அனுப்பபட்டது என்று சொல்லியுள்ளது சம்மந்தமாக நான் அறிவிப்பு எதுவும் வாதிக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. தரம்

குறைந்துவிட்டது என்ற காரணத்தினால் வாதியிடம் சரக்கு வாங்குவதில்லை என்று பொய்யாக இந்த வழக்கிற்க்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. 09.08.2018 அன்று ரூ.18,833.80/- சரக்கு வாதியிடம் வாங்கியுள்ளேன் என்றால் இல்லை. அதனுடைய சரக்கில் அசல் என்னிடம் தான் உள்ளது என்றாலும் அதனுடைய நகலை தான் வாதி தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் சரியல்ல. 06.10.2018 அன்று இன்வாய்ஸ் நம்பர் 857 அதன்படி ரூ.29,736/- சரக்கு வாங்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. 24.10.2018 அன்று இன்வாய்ஸ் நம்பர் 797ன்படி ரூ.19,712/-க்கு சரக்கு வாங்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. 20.12.2018 அன்று இன்வாய்ஸ் நம்பர் 001ன்படி ரூ.20,296/- சரக்கு வாங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் இல்லை.

6. சரக்கு வாங்கிவிட்டு வாதிக்கு பணம் கொடுக்கவில்லை என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலே சரக்கு வாங்காமல் இருந்திருந்தால் 20.12.2018 வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு உடனடியாக நான் மறுப்பு அறிவிப்பு அனுப்பி இருப்பேன் என்றால் சரிதான். ஆனால் போன் மூலம் வாதியிடம் தகவல் சொன்னேன். வாதியை நான் வற்புறுத்தி சரக்கு வாங்க நிர்பந்தம் படுத்தினார்கள் என்று கூறுவது பொய்என்று சொன்னால் சரியல்ல.

7. வாதியிடம் இதுவரைக்கும் வாங்கி சரக்குகளுக்கு எல்லாம் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் சட்டத்திற்க்கு முரணாக வாதி என்னை தொந்தரவு செய்தார் என்று சொல்லியுள்ளேன் அதன் காரணமாக காவல் நிலையத்தில் வாதி மீது புகார் அளித்தேனா என்றால் இல்லை. வாங்கிய சரக்கிற்க்கு பணம் கொடுக்கவேண்டும் என்பதற்காக பொய்யாக என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிறுவனத்திற்க்கு வருமானவரி வரவு,செலவு தொடர்பாக கட்டும்

பழக்கம் உள்ளதா என்றால் சரிதான். வரவு, செலவு கணக்குகள், வருமானவரி கணக்குகள் தொடர்பான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் என்னால் தாக்கல் செய்யஇயலும். நான் வாதியிடம் கேமிக்கல்ஸ் என்ற சரக்குகள் வாங்கியதற்க்கு GST வரி கட்டியுள்ளேன் என்றால் இல்லை.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.